கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com கல்வி அமுது
www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

## திருவாரூர் மாவட்டம் - பத்தாம் வகுப்பு முதல் திருப்புதல் தேர்வு – 2017 அறிவியல் பாட விடைக்குறிப்புகள்

### பிரிவு - I

| சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: | 15 X 1 = 15 | |
|---|---|---|
| 1 | இறந்தவர்களை புதைத்தல் | 1 |
| 2 | மலேரியா | 1 |
| 3 | மெலடோனின் | 1 |
| 4 | மைக்ரோபைல் | 1 |
| 5 | கோரைப்பற்கள் | 1 |
| 6 | கணையம் | 1 |
| 7 | டைபாய்டு | 1 |
| 8 | ஹீலியம் - ஆக்ஸிஜன் | 1 |
| 9 | சிதைவுறுதல் வினை | 1 |
| 10 | தனித்த | 1 |
| 11 | $CH_2$ | 1 |
| 12 | மெல்லியக்கம்பி | 1 |
| 13 | 490 N | 1 |
| 14 | $3.6\times10^{6}$ J | 1 |
| 15 | ஃபாரடே | 1 |

### பிரிவு – II

குறிப்பு:– ஏதேனும் இருபது வினாக்களுக்கு விடையளிக்கவும் 20×2=40

| | | | |
|---|---|---|---|
| 16 | i) சிற்றின உயிரிகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடு.<br>ii) பேரினத்துக்குள்ளே காணப்படும் வேறுபாடு. | 1<br>1 | 2 |
| 17 | A)சரியானது R)சரியானது | 2 | 2 |
| 18 | *இயற்கைத் தேர்வு கோட்பாட்டை வெளியிட்டவர் <u>சார்லஸ் டார்வின்.</u><br><u>கோட்பாடுகள் :</u><br>1. உயினங்களின் வாழ்வியலுக்கான போராட்டத்தில் வெற்றி பெறுபவையே நிலை நிறுத்தப்படும்.<br>2. மரபியல் மாற்றங்களால் தோன்றும் வேறுபாடுகளே பரிணாமத்தை ஏற்படுத்துகின்றன. | 1<br><br>½<br>½ | 2 |
| 19 | **நோய்கள்** — **அறிகுறிகள்**<br>அ) அமீபிக் சீதபேதி — iii) அடிவயிற்றில் வலியுடன் கோழை மற்றும் இரத்தத்துடன் கூடிய மலம்<br>ஆ) காசநோய் — iv) தொடர்ச்சியான இருமல் மற்றும் உடல் எடை குறைதல்<br>இ) படர்தாமரை — ii) தோல், நகங்களில் அரிப்புடன் கூடிய படை<br>ஈ) மலேரியா — i) கடும் காய்ச்சலும் பின்பு உடல் குளிர்ந்து நடுக்கமும் விட்டுவிட்டுத் தொடரும் | ½<br>½<br>½<br>½ | 2 |
| 20 | <br>நுகர்தல் பார்வை | 1<br>1 | 2 |
| 21 | எக்சைன்<br><br>குழாய் நியூக்ளியஸ் | 1<br>1 | 2 |
| 22 | அ) இதயம் எத்தனை அறைகளை கொண்டுள்ளது? அவை யாவை?<br>ஆ) உடலில் சுத்திகரிக்கப்படாத இரத்தத்தை இதயத்தின் எந்த பகுதி பெறுகிறது? (அ) வலப்புற இதயம் உடலின் எந்த வகையான இரத்தத்தை பெறுகிறது. | 1<br>1 | 2 |
| 23 | உட்கரு இல்லாத இரத்தச் செல்கள் - இரத்த சிவப்பணுக்கள்.<br>பயன்கள்:*ஹீமோகுளோபின் உள்ளது.*சிவப்புநிறத்தை கொடுக்கிறது. *சுவாச வாயுக்களை எடுத்து செல்கிறது. | 1<br>1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 24 | ஒட்டகத்தின் தோல் மிகவும் தடிமனாகவும் நீரை ஈர்த்து வைத்துக் கொள்ளும் ஆஸ்மாட்டிக் செல்களையும் கொண்டுள்ளது. | 2 | 2 |
| 25 | அ. A - புளோயம் B - சைலம்<br>ஆ. A யின் வழியாகக் கடத்தப்படும் பொருள்கள் உணவு மற்றும் அமினோ அமிலங்கள்.<br>இ. B யின் வழியாகக் கடத்தப்படும் பொருள்கள் நீர் மற்றும் கனிமப் பொருள்கள்<br>ஈ. நீராவிப்போக்கு, வேரழுத்தம் | ½<br>½<br>½<br>½ | 2 |
| 26 | நாசித்துளை, நுரையீரலுக்குள், வாய், செவுள்களில் உள்ள இரத்தக் குழாய்களுக்குள் பரவுகிறது | 2 | 2 |
| 27 | அம்மோனியாடெலிக் : அதிகமான அம்மோனியாவைக் கழிவுப்பொருளாக வெளியேற்றும் உயிரிகள். எ.கா - மீன்கள்<br>யூரியோடெலிக் : யூரியாவைக் கழிவுப்பொருளாக வெளியேற்றும் விலங்குகள். எ.கா - பாலூட்டிகள். | 1<br>½<br>½ | 2 |
| 28 | அ) 1. ஒளிச்சேர்க்கை 3. சுவாசம்<br>ஆ) ஒளிச்சேர்க்கை : தாவரங்கள் பச்சையம், நீர், $CO_2$ இவற்றினைப் பயன்படுத்தி சூரிய ஒளி முன்னிலையில் (ஸ்டார்ச்) உணவை தயாரிக்கும் நிகழ்ச்சி ஒளிச்சேர்க்கை எனப்படும் .<br>$6CO_2 + 12H_2O \longrightarrow C_6H_{12}O_6 + 6O_2 + 6H_2O$ | 1<br>1 | 2 |
| 29 | அ.ஹைட்ரஜன்<br>ஆ. [illegible] பெட்ரோலியம் | 1<br>1 | 2 |
| 30 | திரும்பப் பெறும் வளங்கள்: ஹைட்ரஜன், காற்று, சூரிய ஒளி ஆற்றல்<br>திரும்பப் பெற இயலாத வளங்கள்: கரி, இயற்கை வாயு, பெட்ரோலியம் | 1<br>1 | 2 |
| 31 | ஒளிரும் பல்புகள், சூரிய நீர் சூடேற்றி, மின்னணு மின் அடை. | 2 | 2 |
| 32 | அ) கரைசல் என்பது கரைப்பானால் ஆன ஒரு படித்தான கலவையாகும்.<br>ஆ) கூழ்மக் கரைசலில் துகளை நுண்ணோக்கி மூலம் பார்க்கலாம். | ½ ½<br>½ ½ | 2 |
| 33 | நிறை சதவீதம் = கரைபொருளின் நிறை / கரைபொருளின் நிறை + கரப்பானின் நிறை x 100<br>= 20 / 20+50 x 100<br>= 2000 / 70<br>= 28.57% | 1<br>1 | 2 |
| 34 | அ. STP - ல் ஒரு வாயுவின் மோலார் பருமன் 22.4 *லிட்டர்.*<br>ஆ. $H_2O$ - ஓர் வேற்றணு மூலக்கூறு | 1<br>1 | 2 |
| 35 | $P^{OH} = -\log_{10} [\ OH^- ]$<br>$P^{OH} = -\log_{10} [1.0\times10^{-9}]$<br>$P^{OH} = 9$<br>$\therefore P^{H} = 14-9 = 5$ | 1<br>1 | 2 |
| 36 | 1) சாதாரண உப்பு - NaCl<br>2) சமையல் சோடா - $NaHco_3$<br>3) சலவைத்தூள் - $CaOCl_2$<br>4) சலவை சோடா - $Na_2co_3$ | ½<br>½<br>½<br>½ | 2 |
| 37 | அ) ஹேமடைட்<br>ஆ) CO | 1<br>1 | 2 |
| 38 | A சரியானது, R சரியானது | 2 | 2 |
| 39 | i) சேர்மம் A - $CH_3COOH$ (எத்தனாயிக் அமிலம்) சேர்மம் B - $CH_3COOC_2H_5$ (எத்தில் எத்தனோயேட்)<br>ii) எஸ்டராக்குதல் வினை : $C_2H_5OH + CH_3COOH \longrightarrow CH_3COOC_2H_5 + H_2O$ | 1<br>1 | 2 |
| 40 | அ. ஒரு நியூட்டன் விசை என்பது ஒரு கிலோகிராம் நிறையுள்ள பொருளில் $1ms^{-2}$ முடுக்கத்தை ஏற்படுத்தும் விசையின் அளவைக் குறிக்கும்.<br>ஆ. வினையும் எதிர்வினையும் எப்போதும் இரு வேறுபட்ட பொருள்களின் மீது செயல்படும். | 1<br>1 | 2 |
| 41 | அ. A - வினை B - எதிர் வினை | 1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| | ஆ. ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான ஆனால், எதிர்திசையில் செயல்படுவதுமான ஓர் எதிர்வினை உண்டு. | 1 | |
| 42 | நேர்மின்வாய் – காரீய அமிலச் சேமகலன் – காரீய டை ஆக்ஸைடு<br>எதிர்மின்வாய் – லெக்லாஞ்சி மின்கலன் – துத்தநாகம் | 1<br>1 | 2 |
| 43 | V =220V  I = 0.50 A<br>எனில் மின்விளக்கின் திறன் P = VI<br>P = 220 X 0.50<br>P = 110 W | 1<br><br>1 | 2 |
| 44 | <br> | 1<br>1 | 2 |
| 45 | அ) ஐரிஸ், ஆ) விழித்திரை | 2 | 2 |
| 46 | அ.சிவப்பு ஆ.அதிக | 1<br>1 | 2 |
| 47 | அ. ஒளி விலகல் ஆ. 2.3 | 1 | 2 |

**பிரிவு – III** 4×5=40

| | | | |
|---|---|---|---|
| 48 | (see tables below) | 5 | 5 |

| புரதச்சத்து குறைபாட்டு நோய்கள் | | |
|---|---|---|
| 1. | மாரசுமஸ் | குழந்தை எடை குறைவு. கடுமையான வயிற்றுப் போக்கு, எலும்பு மீது தோல் போர்த்தப்பட்ட அமைப்பு |
| 2. | குவாஷியார்கர் | உப்பிய வயிறு, முகம், கால்களில் வீக்கம் |

| வைட்டமின் குறைபாட்டு நோய்கள் | | | |
|---|---|---|---|
| | வைட்டமின் | குறைபாட்டு நோய்கள் | அறிகுறிகள் |
| 1. | வைட்டமின் A | நிக்டோ லோபியா | மாலைக்கண் |
| 2. | வைட்டமின் D | ரிக்கட்ஸ் | எலும்புகளில் கால்சியம் குறைபாடு |
| 3. | வைட்டமின் E | மலட்டுத் தன்மை | இனப் பெருக்கச் செயல் குறைபாடு |
| 4. | வைட்டமின் K | இரத்தம் உறையாமை | அதிக இரத்த இழப்பு |
| 5. | வைட்டமின் $B_1$ | பெரி–பெரி | நரம்பு செயல்பாட்டுக் குறைவு |
| 6. | வைட்டமின் $B_5$ | பெல்லாகரா | மறதி நோய், தோல் நோய், வயிற்றுப் போக்கு |
| 7. | வைட்டமின் $B_{12}$ | பெர்னிசியஸ் அனிமியா | இரத்த சிவப்புணுச் சிதைவு |
| 8. | வைட்டமின் C | ஸ்கர்வி | ஈறுகளில் இரத்தம் கசிதல், பல் விழுதல் |

**49**

| நாளமில்லாச் சுரப்பிகளின் பெயர்கள் | அமைவிடம் |
|---|---|
| பிட்யூட்டரி சுரப்பி, பீனியல் சுரப்பி | தலை |
| தைராய்டு, பாரா தைராய்டு | கழுத்து |
| தைமஸ் | மார்பு |
| கணையம்,அட்ரீனல்,இனப்பெருக்க சுரப்பிகள் | வயிறு |

1

**1.தைராய்டு சுரப்பி :**

அமைவிடம்:

- கழுத்துப் பகுதியில் குரல்வளையின் இருபுறமும் பக்கத்திற்கு ஒன்றாக இரு கதுப்புகளை உடைய அமைப்பு ஆகும்.
- இது தைராக்ஸின் என்ற ஹார்மோனைச் சுரக்கிறது. இதில் டைரோசினும் (அமினோ அமிலம்), அயோடினும் உள்ளன.

1 5

தைராக்ஸினின் பணிகள்

- வளர்சிதை மாற்ற வீதத்தை உயர்த்துகிறது.
- உடலின் வெப்பத்தை அதிகரிக்கத் தூண்டுகிறது.
- திசு வளர்ச்சி மற்றும் மாறுபாடு அடைதலை ஊக்குவிக்கிறது.
- உடல் வளர்ச்சியை மறைமுகமாகப் பாதிப்பதால் இஃது ஆளுமை ஹார்மோன் எனவும் அழைக்கப்படுகிறது.
- இரத்தத்தில் அயோடின் மற்றும் சர்க்கரை அளவை ஒழுங்குபடுத்துகிறது.
- சிறுநீரகச் செயல்பாட்டையும், சிறுநீர்ப் போக்கையும் கட்டுப்படுத்துகிறது.

3

**தைராய்டின் குறைபாடுகள் :**

- தைராக்ஸினின் குறை சுரப்பினால் ஏற்படும் குறைபாடு - எளிய காய்டர், மிக்ஸிடிமா, கிரிட்டினிஸம்.
- தைராக்ஸினின் மிகை சுரப்பினால் ஏற்படும் குறைபாடு - கிரேவின் நோய்.

**2.கணையம் :**

- கணையம் நாளமுள்ள, நாளமில்லாச் சுரப்பியாக இருவழிகளில் செயல்படுகிறது.
- கணையத்தின் நாளமில்லாச் சுரப்பிப் பகுதியாக லாங்கர்ஹான் திட்டுக்கள் உள்ளன.
- இதில் ஆல்பா, பீட்டா என்ற இருவகைச்செல்கள் காணப்படுகின்றன. ஆல்பா செல்கள் குளுக்கோகான் ஹார்மோனையும் பீட்டா செல்கள் இன்சுலின் என்ற ஹார்மோனையும் சுரக்கின்றன.
- இன்சுலின் குறைவாகச் சுரப்பதால் டயாபடீஸ் மெலிடஸ் தோன்றுகிறது. இரத்தத்தில் காணப்படும் அதிகப்படியான,பயன்படுத்தாத குளுக்கோஸ் சிறுநீரில் வெளியேற்றப்படுகிறது.
- குளுக்கோகான் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும்போது சுரக்கிறது. கிளைகோஜனைக் குளுக்கோஸாக மாற்றமடைவதைத் தூண்டி இரத்தச்சர்க்கரை அளவை உயர்த்துகிறது.
- இயல்பான இரத்தச் சர்க்கரை அளவு 80 - 120 மி.கி. / டெசி.லி. இரத்தம் என்ற நிலையைப் பராமரிக்க இரத்தத்தில் சமஅளவு இன்சுலினும், குளுக்கோகானும் இருக்க வேண்டும்.

**50**

**ஒருவித்திலை விதையின் அமைப்பு (நெல் ):**



- ➢ நெல், தாவரத்தின் விதை என அழைக்கப்பட்டாலும் அஃது உண்மையில் ஒரு கனியாகும்.
- ➢ இது வெடியாஒரு விதையுடைய தனிக்கனி ஆகும். இதற்குக் கேரியாப்சிஸ் என்று பெயர்.
- ➢ நெல் விதையின் உறை மிக மெல்லியதாகும். கனியுறை மெல்லியது;விதையுறையுடன் இணைந்துள்ளது.
- ➢ கனியானது பொதுவாக மஞ்சள் நிறப் பூவடிச் செதிலாலும் பூக்காம்புச் செதில்களாலும் மூடப்பட்டுள்ளது. பொதுவாக இதற்கு உமி என்று பெயர்.

1 5

- ➢ கருவானது ஸ்கூட்டல்லம் எனப்படும் ஒரு வித்திலையையும், குறுகிய அச்சையும் கொண்டுள்ளது.
- ➢ குறுகியஅச்சினுடைய அடிநுனியில் முளைவேரும், நுனி முனையில் முளைக்குருத்தும் உள்ளன.
- ➢ முளை வேரானது கோலியோரைசா எனப்படும். முளைவேர் உறையினால் மூடப்பட்டுள்ளது. இதேபோன்று முளைக்குருத்து கோலியாப்டைல் எனப்படும்.

4

| | | | |
|---|---|---|---|
| 51 | அ) உயிர் சிதைவடையும் கழிவுப் பொருட்கள் : கட்டை, காகிதம், புற்கள்<br>உயிர் சிதைவடையாக் கழிவுப் பொருட்கள் : பிளாஸ்டிக்<br>ஆ) <u>உயிர்-சிதைவடையும் கழிவுப் பொருட்கள்</u>: கழிவுப் பொருட்கள் உயிரியல் செயல்பாடுகளின் காரணமாகவோ அல்லது நுண்ணுயிரிகளின் செயல்பாடுகளின் காரணமாகவோ சிதைவடைந்தால் அது உயிர் சிதைவடையும் கழிவுப் பொருள்கள் எனப்படும். எ.கா : கட்டை, காகிதம், புற்கள்<br><u>உயிர்-சிதைவடையாக் கழிவுப் பொருட்கள்</u>: கழிவுப் பொருட்கள் உயிரியல் செயல்பாடுகளின் காரணமாகவோ அல்லது நுண்ணுயிர்களின் செயல்பாடுகளின் காரணமாகவோ சிதைவடையாத கழிவுப் பொருட்கள் உயிர்-சிதைவடையாக் கழிவுப் பொருள்கள் எனப்படும். எ.கா : பிளாஸ்டிக். | 2<br>3 | 5 |
| 52 | அ. அம்மோனியாவின் மோல்களின் எண்ணிக்கை = 67.2 / 22.4 லி = 3 மோல் அம்மோனியா<br>ஆ. (அணு நிறை N=14, H=1, Cl=35.5) எனவே $NH_4Cl$ ன் நிறை = 1(N)+4(H)+1(Cl) = 1(14)+4(1)+1(35.5) = 53.5கி<br>$NH_4Cl$ ன் நிறை கிராமில் = மூலக்கூறு நிறை × மோல்களின் எண்ணிக்கை = 53.5 × 1 = 53.5 கி<br>இ. அம்மோனியா<br>ஈ. $NH_3 + HCl \longrightarrow NH_4Cl$ | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |
| 53 | <u>படிவரிசைகளின் சிறப்பியல்புகள் :</u><br>➢ படிவரிசையில் உள்ள அடுத்தடுத்த சேர்மங்கள் $CH_2$ என்ற பொது வேறுபாட்டிலும் மூலக்கூறு நிறை 14 amu (அணு நிறை அலகு) என்ற அலகாலும் வேறுபடுகின்றன.<br>➢ ஒரு படிவரிசையில் உள்ள அனைத்துச் சேர்மங்களும் ஒரேவகைத் தனிமங்களையும், வினைத் தொகுதிகளையும் பெற்றிருக்கும்.<br>➢ ஒரு படிவரிசையில் உள்ள அனைத்துச் சேர்மங்களையும், ஒரே பொதுவாய்பாட்டினால் குறிப்பிட இயலும். எ.கா. அல்கேன் = $C_nH_{2n+2}$ அல்கீன் = $C_nH_{2n}$ அல்கைன் = $C_nH_{2n-2}$<br>➢ மூலக்கூறுநிறையின் அதிகரிப்பைப் பொறுத்து சேர்மங்களின் இயற்பண்புகள் ஓர் ஒழுங்கான முறையில் மாறுகின்றன.<br>➢ எல்லாச் சேர்மங்களும், ஒத்த வேதிவினைகளில் ஈடுபடுகின்றன.<br>➢ எல்லாச் சேர்மங்களையும், பொதுவான முறையில் தயாரிக்கலாம். | 5 | 5 |
| 54 | அ.<br>❖ விண்வெளியில் குறிப்பிட்ட காலம் தங்கி ஆய்வுப்பணிகள் மேற்கொள்வதற்காக மனிதனால் வடிவமைக்கப்பட்டது விண்வெளி நிலையமாகும்.<br>❖ இது மற்ற விண்கலங்களைப் போல் அல்லாமல் பல நாள் விண்வெளியில் தங்கி, அதிக எண்ணிக்கையிலான ஆய்வுகள் மேற்கொள்ள இவை அடித்தளமாய் அமைகின்றன.<br>❖ மிகக் குறைந்த மறுசுழற்சிவீதம், அதிகக் கதிர்வீச்சு, குறைந்த ஈர்ப்புவிசை ஆகியவை இவற்றில் தங்கும் காலத்தைக்குறைப்பனவாகும். இவை நமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகவும், நெடுநாள் உடல்நலப் பாதிப்பைத் தருவதாகவும் உள்ளது.<br>ஆ. அண்டத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் மற்ற பொருள்களை அவற்றின் நிறைகளின் பெருக்கற்பலனுக்கு நேர்த்தகவிலும் அவற்றிற்கு இடையே உள்ள தொலைவின் இருமடிக்கு எதிர்த்தகவிலும் அமைந்த விசையுடன் ஈர்க்கும். | 2<br>3 | 5 |
| 55. | <br>அ)படுகதிர் - PE<br>ஆ)விலகுகதிர் -EF<br>இ)மீள்கதிர் - FS<br>ஈ)விலகுகோணம் - r<br>உ)திசை மாற்றக்கோணம் -d<br>ஊ)விடுகோணம் - e<br>(ii) ஒளிவிலகல் எண் (μ) = காற்றில் ஒளியின் திசைவேகம் / ஊடகத்தில் (வைரம்) ஒளியின் திசைவேகம்<br>வைரத்தின் ஒளியின் திசைவேகம் = காற்றில் ஒளியின் திசைவேகம் / ஒளிவிலகல் எண்<br>$= 3 \times 10^8 / 2.42$<br>$= 1.23$ மீவி$^{-1}$<br>வைரத்தில் ஒளியின் திசைவேகமானது காற்றில் ஒளியின் திசைவேகத்தை விட குறைவாகும் | 2<br>3 | |